# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 62 ஆம் இலக்க, கண்டி ஸ்ரீ கல்யானோதய சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, ஒற்றோபர் மாதம் 30 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2009 ஆம் ஆண்டின் 62 ஆம் இலக்க, கண்டி ஸ்ரீ கல்யானோதய சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. (கூட்.) 15/2007

## கண்டி ஸ்ரீ கல்யானோதய சங்கத்தைக் கூட்டிணைப்பதற் கானதொரு சட்டம்

முன்னுரை.

“கண்டி ஸ்ரீ கல்யானோதய சங்கம்” என்று அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட சங்கத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்கென கண்டியில் தாபிக்கப் பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட சங்கமானது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்களின் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினால் இத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 62 ஆம் இலக்க, கண்டி ஸ்ரீ கல்யானோதய சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

கண்டி ஸ்ரீ கல்யானோதய சங்கத்தைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் “சங்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) “கண்டி ஸ்ரீ கல்யானோதய சங்கத்தின்” இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் “கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடு செய்யப் படும்) “ கண்டி ஸ்ரீ கல்யானோதய சங்கம்” என்ற பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன்

2-PL 002113 -1,020 (2008/01)

அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) புத்த சாசனத்தை விசாலிப்பதற்கும் அதன் உறுதிப்பாட்டிற்கும் நடவடிக்கைகளை எடுப்பதன்மூலம் பௌத்தர்களிடையே அதனைப் பேணி வளர்த்தல் ;

(ஆ) பௌத்தர்களிடையே சமாதானத்தையும் ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும் மேம்படுத்துவதற்கு அனைத்து பௌத்தச் சங்கங்களுடனும் ஒருங்கிணைந்து பணியாற்றுதல் ;

(இ) பௌத்தர்களிடையே பௌத்த மதக் கோட்பாடுகளைப் பதியவைக்கும் நோக்கத்துடன் தம்ம பாடசாலைகளை மற்றும் தியான நிலையங்களில் மதப் பிரசங்கங்களை ஒழுங்கு செய்தல் ;

(ஈ) பௌத்தர்களிடையே நலம்பேணல் திட்டமொன்றை ஆரம்பித்தல் ;

(உ) கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான ஆதனங்களை பௌத்தர்களின் நன்மைக்கென பேணுதலும் முகாமை செய்தலும் ;

(ஊ) பௌத்தர்களுக்கென பௌத்தமதக் கல்வி மற்றும் கலாசார நடவடிக்கைகளில் ஈடுபடுதல் ; அத்துடன்

(எ) பௌத்தர்களுக்கு மதம் மற்றும் கல்வித்துறை சார்ந்த சுற்றுலாக்களை ஒழுங்கு செய்தல்.

*கூட்டுத்தாபனத்தின் மதியுரைச்சபை.*

**4**. கூட்டுத்தாபனத்தின் மதியுரைச் சபையொன்றிருத்தல் வேண்டும். இது முகாமைத்துவக் குழுவுக்கு மதியுரை வழங்கும் நோக்கத்திற்கு பொது நிலையினரும் குருக்களும் உட்பட ஏழுக்கு மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவமும் நிர்வாகமும் இச்சட்டத்தினதும் 8 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளினதும் ஏற்பாடுகளுக்கமைய தலைவர், நான்கு துணைத் தலைவர்கள், பிரதம செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், கணக்காய்வு அலுவலர், ஒழுங்கமைப்பாளர் அத்துடன் வேறு ஏழு அலுவலர்கள் ஆகியோரைக் கொண்ட முகாமைக் குழுவொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் நலம்பேணுதலுக்காக துணைக்குழுவொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்கு அவசியமானபோது கூட்டுத்தாபனம் விசேட துணைக் குழுக்களையும் தாபித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைக் குழு இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர் முந்திய நாளன்று பதவி தாங்கும் சங்கத்தின் முகாமைக் குழுவாதல் வேண்டும்.

*உறுப்பாண்மை இடாப்பு.*

**6**. சபையானது உறுப்பினர்களின் இடாப்பொன்றை பேணச் செய்வித்தல் வேண்டும். இதில் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று சங்கத்தின் உறுப்பினரொருவராக இருக்கும் ஒவ்வோராளும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒருவராக முறையாகச் சேர்த்துக் கொள்ளப்படும் ஒவ்வோராளும் அவரது பெயரை பதியச் செய்வித்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.*

**7**. கூட்டுத்தாபனம் இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய பின்வருவனவற்றிற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கான கூட்டுத்தாபனத்தினுடைய காணிகளையும் கட்டிடங்களையும் வாடகைக்குவிடுதல்;

(ஆ) நிதிகளைத் திரட்டுதலும் காசாக அல்லது பொருளாக நன்கொடைகளையும் கொடைகளையும் ஏற்றுக் கொள்ளுதலும் ;

(இ) கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான ஏதேனும் காணியில் கட்டிடங்களை நிர்மாணித்தல் அல்லது நிர்மாணிக்கச் செய்வித்தல் ;

(ஈ) மாற்றுண்டியல்களையும், காசோலைகளையும் வாக்குறுதிப் பத்திரங்களையும் அத்துடன் வேறு ஏதேனும் கைமாற்றத்தகு சாதனத்தையும் ஆக்குதல், எழுதுதல், ஏற்றுக் கொள்ளல், எதிரீட்டொப்பமிடுதல், கைமாற்றுதல், கொள்வனவு செய்தல் மற்றும் வழங்குதல் அத்துடன் ஏதேனும் வங்கியில் நடைமுறை மற்றும் சேமிப்புக் கணக்குகளை ஆரம்பித்தல், தொழிற்படுத்துதல் மற்றும் பேணுதல் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத கூட்டுத்தாபனத்தின் நிதிகளை முகாமைக்குழுவினால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்தல் ;

(ஊ) அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்கள் தொடர்பில் ஏதேனும் சட்டமுறையான நம்பிக்கைப் பொறுப்புகளையும் ஏற்றுக்கொள்ளுதல், நடைமுறைப்படுத்துதல், நிறைவேற்றுதல் அத்துடன் முகாமை செய்தல் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல், ஊதியமளித்தல், தொழிலுக்கமர்த்துதல் அத்துடன் பதவி நீக்கம் செய்தல் ; அத்துடன்

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்குத் தேவையான ஆட்களைப் பயிற்றுவித்தல்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**8.** (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டிற்குக் குறையாத பெரும்பான்மையைக் கொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும்

அல்லது எவற்றுக்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதன வாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத் தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல், அத்துடன் உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்கள் பதவி விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் ;

(ஆ) குழுவின் பதவிதாங்குநர்களைத் தெரிவு செய்தல், அவர்கள் பதவி விலகுதல், குழுவின் உறுப்பினர்களின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் அவர்களின் நடத்தை;

(இ) சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்தல் ; அவர்களது பதவிக் காலம், பதவி விலகல், பதவியை வறிதாக்கல், பதவியிலிருந்து அகற்றப்படுதல், அவர்களது தத்துவங் கள், நடத்தை மற்றும் கடமைகள் ;

(ஈ) கூட்டங்களில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடவடிக்கை முறையும், அத்தகைய மற்றும் கூட்டநடப்பெண், அதில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதல் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களின் தகைமைக ளைத் தீர்மானித்தல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தல் மற்றும் முகாமை செய்தல் ; அத்துடன்

(எ) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்த லும் அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, அதேபோன்ற கூட்டத்தில் அதே முறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்த்துக் கொள்ளப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**9.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அன்பளிப்பு, மரணசாதன ஆதனக் கையளிப்பு, அறுதிமாற்றம், நன்கொடைகள், உதவு தொகைகள், ஒப்பப்பணங்கள், கட்டணங்கள் அல்லது மானியக் கொடைகள் என்ற வகையில் கூட்டுத்தாபனத்திற்காக அல்லது அதன் கணக்கில் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் முகாமைச் சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் நிதியின் வரவிற்கு முதலீடு செய்யப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான ஆதனங்களின் புனரமைப்பு, மேம்பாடு மற்றும் அபிவிருத்தி என்பவற்றின் நோக்கத்திற்கு ஏதேனும் கடனாழ் அல்லது ஒதுக்கீட்டு நிதியத்தைத் தாபிக்கலாம்.

(3) இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும் நிறைவேற்றுகையிலும் புரிகையிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தை ஈடு செய்வதற்குத் தேவையான எல்லாப் பணத் தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) நிதியத்திற்குப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் ஆதனங்களும் கூட்டுத்தாபனங்களும் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக மாத்திரமே பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அவை எதுவிடயத்திலும் உறுப்பினர்களுக்குப் பாராதீனப்படுத்தப்படுதலாகாது.

கணக்குகளின் கணக்காய்வு.

**10.** (1) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்கள், பொறுப்புக்கள் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் குறைந்தபட்சம் ஆண்டொன்றில் ஒரு முறையாவது கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர்களால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(i) இலங்கையின் வரரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில் புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவருமான ஆள் ஒருவர் எனப் பொருளாகும் ; அல்லது

(ii) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவிருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில் புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவராகவும் இருக்கின்றாரோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று எனப் பொருளாகும்.

*சங்கத்தினால் செலுத்தப் படவுள்ள தனிசுகளும் சங்கத்திற்குச் செலுத்தப் படவுள்ள தனிசுகளும்.*

**11.** இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று சங்கத்திற்குரிய எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் சங்கத்தின் நிதியிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று சங்கத்திற்கு வருமதியாக உள்ள எல்லாத் தனிசுகளும், செலுத்தப்படுதற்குரிய ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**12.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, கொடுத்து மாற்றல், இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்குரித்தாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனம் எல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்

களுக்காகவும் 8 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறு வகையில் கையாள அல்லது பொறுப்பிக்கவுமுள்ள முழுத் தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**13**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினை செயலாளரின் குழுவால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய உறுப்பினரின் அல்லது பதவிதாங்குநர்களின் முன்னிலையிலன்றி சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தங்கள் பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அத்தகைய கையொப்பமிடுதல் சாட்சியொருவராக எவரேனுமாள் கையொப்பமிடுவதின்று தனிவேறானதாதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும் நிதிசார்ந்த விடயம் தொடர்பிலான சாதனம் எதுவும் பொருளாளராலும் அல்லது துணைப் பொருளாளராலும் அத்துடன் தலைவராலும் அல்லது செயலாளராலும் ஒப்பமிடப்பட்டாலன்றி வறிதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் கலைக்கப் படுவதன்மீது எஞ்சியிருக்கும் ஆதனம்.

**14**. கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன்மீது அதன் எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் செலுத்தித் தீர்க்கப்பட்டதன் பின்னர் ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களை உடையதும் அல்லது உடையனவும், ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தை அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுவதினின்று அதன் அல்லது அவற்றின் விதிகளால் தடைசெய்யப்பட்டதும் அல்லது தடைசெய்யப்பட்டவையுமான ஏதேனும் வேறு நிறுவனத்திற்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது மாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள், கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன்மீது அல்லது அதற்கு முன்னர் குழுவால் தீர்மானிக்கப்படலாம்.

குடியரசினதும் மற்றையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.

**15**. இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

***16***. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387* : (வெளிநாடு) ரூபா *1,849* : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்